சில இடங்களிலே ஒரு லட்சத்திற்குக் குறைந்தும் வருகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் 375 என்றும் பிரிக்கப்பட்டது மத்திய அரசாங்கத்தினால் தான் பிரிக்கவேண்டிய நிலைமை வந்தது. காரணம் அவர்கள் உதவி செய்தது. நிர்வாக சீர்திருத்தக் குழுவிடம் இந்தப் பிரச்சனைப்பற்றி ஆராயச் சொல்லியிருக்கிறோம். அதை ஆராய்ந்து எந்த முறைகளில் ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்து அமைக்கப்பட வேண்டுமென்று அறிக்கை தருகிறார்களோ அப்படி அவர்கள் அறிக்கை தந்ததிற்குப் பிறகு அந்த அறிக்கையைப் பார்த்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

மாநகராட்சி அரங்கம்

*497 வினா—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு கல்வி- உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விலங்குக்காட்சிசாலைக்கு அருகில், அரங்கம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கோரி, சென்னை மாநகராட்சி, அரசுக்கு எழுதிக் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்; (அ) ஆம் (இ) 1970 ஆம் ஆண்டு சூன் திங்களில் மாநகராட்சி மன்றம், நாடகம் இசைமுதலிய பண்பாடு பற்றிய நிகழ்சிகளை நடத்துவதற்காக ஏறக்குறைய ரூபாய் பதினைந்து இலட்சம் செலவில் புதுமையானதொரு திரையரங்கம் கட்டுவதற்கான கருத்தை முன் மொழிந்தது. மாநகராட்சி மன்றம் அத்திட்டத்திற்கு நிதியளிக்கக் கூடிய நிலையில் இல்லாதிருக்கவே மன்றம் சிறப்பான நிதிநிலைமையினை யடையும்வரையில் அச்செயற்குறிப்பு தள்ளி வைக்கப்பட்டது.

பஞ்சாலைகளை நடத்த உதவித்தொகை

*498 வினா.—திரு. கே. ஏ. வகாப்.—மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) 1971 ஜூலை மாதத்தில், தமிழ்நாட்டில் மூடியுள்ள மில்களை எடுத்து நடத்த தேசீய கார்ப்பரேஷன் உதவியைக் கோரி தமிழ்நாடு அரசு, மத்திய அரசை நாடியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் மத்திய அரசின் பதில் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தேசீய பஞ்சாலை கார்ப்பரேஷன் அதன் கணக்கின்படி ஏழு மில்களுக்குக் கொடுக்கவேண்டிய உதவித் தொகையான ரூ.86·20 லட்சத்தைத் தற்சமயம் கொடுத்துவிட்டது. எடுத்த மில்களை யந்திர நவீனமாக்குதலுக்கு தேசீய கார்ப்பரேஷன் இதுவரை ரூ. 4·76 லட்சம் தான் கொடுத்துள்ளது.

1973 மார்ச் 24]

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிகமான மில்கள் இப்படி சிக் மில்களாக இருப்பதை உணர்ந்தும் அவர்கள் குறைந்த தொகை கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷனிடம் மட்டுமல்லாமல், மத்திய அரசிடமிருந்தும் அதிகமான தொகையைக் கோரிப்பெற நம்முடைய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய நிறுவனம், எடுக்கின்ற ஆலைகளுக்குத் தேவையான பணத்திலே 51 சதவிகிதம் கொடுக்க வேண்டும். அதைக் கொள்கையளவிலே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கால தாமதம் ஆனாலும் நிச்சயம் தந்து விடுவார்கள் என்று நம்புகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மில்களை அரசே எடுத்துக்கொள்கிற நேரத்திலே அதற்கு அனுமதி தர மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது, மறுக்கிறது என்ற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். நம்முடைய வருத்தத்தை மத்திய அரசுக்கு இந்த அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்களே அதைத் தெரிவித்து விட்டார்கள்.

திரு. நா. வீராசாமி : இந்த சிக் மில்களை ஊக்குவிக்கின்ற முறையில் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் இதையெல்லாம் நம்முடைய அரசு டேக் ஓவர் செய்வதற்காக பணத்தை யெல்லாம் செலவு செய்து இருக்கிறது. இப்படிப்பட்ட மில்கள மின்சார வெட்டு இல்லாமல் 24 மணி நேரமும் வேலை செய்யக்கூடிய முறையில் வழிவகை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மின்சாரம் அதிகமாகக் கிடைக்குமானல் அதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சிக் மில்களுக்கு 1971-லே மத்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு உதவி வந்திருக்கிறது. நம்முடைய மாநில அரசு எவ்வளவு உதவி செய்திருக்கிறது என்பதை தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்த ஆண்டு எவ்வளவு என்ற விவரம் இல்லை. மொத்தமாக நமக்கு 51 சதவீதம் வரவேண்டும். 7 ஆலைகளுக்கு மொத்தத்தேவை 188·12 லட்சம், அதிலே 51 சதவீதம் என்பது 95·95 லட்சம் அளவிற்கு அவர்கள் தர வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : இந்தப் பஞ்சாலைகளிலே இயந்திரங்களை நவீனமாக்குவதற்கு ஆன திட்டத்திற்கு எவ்வளவு காலக்கெடு நிச்சயிக்கப் பட்டு இருக்கிறது ? எவ்வளவு தொழிற்சாலைகளை நவீனமாக்க வேண்டு மென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ? அதற்கு ஒவ்வொரு வருஷமும் ஆகும் செலவு என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா ஆலைகளும் நவீனப்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய திட்டம். எல்லா வற்றிற்கும் எவ்வளவு வேண்டும் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

Sale of Controlled Cloth.

* 499 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) whether the Tamil Nadu Textile Corporation has proposed to open fair price shops for the sale of controlled cloth in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சில ஆலைகள் கூட்டாக 31—10—72-ல் பீளமேட்டில் ஒன்றும், 1973 ஜனவரியில் சிங்காநல்லூரில் ஒன்றும் ஆக இரண்டு நியாய விலைக் கடைகள் திறந்திருக்கின்றன.

திரு. என். டென்னிஸ் : மாநிலத்திலுள்ள வேறு இடங்களிலும் இது மாதிரி நியாய விலைக் கடைகள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

முற்பகல் 9-30

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலைகள் கோவையில் இருக் கின்றன. அங்கே உற்பத்தி செய்யப்படுவதை விற்கின்ற நிலையங்கள் அங்கு திறக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய விற்பனை எப்படி நடைபெறுகிறது என்பதையொட்டி மேற்கொண்டு பரிசீலிக்கலாம்.

திரு ந. தருமலிங்கம் : நியாய விலைக் கடைகள் என்று போர்டு போட்டுக்கொண்டு தனியார் கடைகளில் அநியாய விலைக்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தனியார் கடைகளைப் பற்றி என்ன நிலை என்று தெரியாது. நாம் இப்போது ஆரம்பித்திருப்பது நம்முடைய தொழிற்சாலைகளில் உற்பத்தியானவற்றை அதிக லாப நோக்கு இல்லாமல் குறைந்த விலைத் துணிகள் ஏழைகளுக்கு வேண்டிய அளவுக்குக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்பதுதான் திட்டம்.